**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 25/2010** **நாள்.16.06.2022**

2022 ம் ஆண்டு ஜுன் திங்கள் 16 ம் நாள் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகிராமன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வரதப்பநாயக்கர் | சாதி | |
| கிராமம் | சென்னை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 71 |

**பி.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சென்னையில் உள்ள வீட்டை கட்டுவதற்காக என் தந்தை வாங்கிய கடன் என் தந்தை இருக்கும் போதே பைசல் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. அவர் இறந்த பின்பு நான் தான் கடனை அடைத்தேன். மேற்படி கடனை நான் அடைத்ததற்கான ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை வீட்டின் பேரில் வாங்கிய கடனை அடைத்த பிறகு 27.06.2016 ல் நான், என் மனைவி , மகன் ஆகியோர் திருவள்ளிகேணி பேனிபிட் பண்ட் நிறுவனத்தில் அதே வீட்டின் பேரில் அடமானம் வைத்து ரூ 4 இலட்சம் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த கடனை அடைத்துவிட்டேன். என் சகோதிரிகளை வாரிசுகளாக சேர்க்காமல் நான் மட்டும் வீட்டின் பேரில் கடன் வாங்கினேன். வீட்டையும், காலிமனையையும் அடமானம் வைத்து தான் கடன் வாங்கினேன் என்றால் அந்த விவரம் என் மனைவிக்கு தான் தெரியும். சென்னையில் உள்ள வீடு என் அப்பாவிற்கு சர்வசுதந்திர பாத்தியம் என்பதால் தான் அவர் பெயரில் கடன் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அது வக் போர்டுக்கு சொந்தமானது ஆகும். மேற்படி வீடு வக் போர்டுக்கு சொந்தமானது என்றால் நானும், என் தகப்பனாரும் கடன் வாங்கமுடியாது என்றால் சரியல்ல. சென்னையில் உள்ள வீடு ரூபாய் 80 இலட்சம் மதிப்பு இருக்கும் என்றால் பாயை கேட்டால் தெரியும். மேற்படி வீட்டில் என்னை தவிர்த்து 4 நபர்கள் குடியிருக்கிறார்கள். 4 நபர்களுக்கும் தனி தனி மின் இணைப்பு உள்ளது. மேற்படி வீட்டிற்கு எனது தந்தை வரதப்ப்நாயக்கர் பெயரில் மின் இணைப்பு இருந்தது. என்னுடைய தந்தையின் இறப்பு சான்றிதழை கொடுத்து தற்போது நான் என் பெயரில் மின் இணைப்பு மாற்றி கொண்டேன். மேற்படி வீட்டில் உள்ள வாடகைதாரர்களிடம் இருந்து நான் தான் வாடகையை பெற்று வருகிறேன். ஒவ்வொருவரிடம் இருந்து எவ்வளவு வாடகை வரும் என்பது என்

மனைவிக்கு தான் தெரியும். மேற்படி வீட்டிற்கு தண்ணீர் வரி, வீட்டு வரி, மின் கட்டணம் ஆகியவை என் பெயரில் தான் கட்டிவருகிறேன். என் தகப்பனாரின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். சென்னையில் உள்ள வீடு 4 பேருக்கும் உரிமையானது என்றாலும நான் என் செல்வாக்கை பயன்படுத்தி என் பெயரில் ஆவணங்களை ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. நான் வீட்டின் பேரில் பெற்ற கடனை பைசல் செய்வதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா A அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமத்தில் உள்ள சொத்துவிவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. தாவா A அட்டவணை சொத்தில் உள்ள சில சொத்துக்களை விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்தான கண்டாட்சி மேடு கிராமத்தில் உள்ள சொத்துக்கள் அனைவருக்கும் உரிமையுண்டு என்றால் சரிதான். அதேபோல் சென்னையில் உள்ள வீட்டிலும் அனைவருக்கும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பெருமாள் நாயக்கர் எனது சித்தப்பா ஆவார். மேற்படி பெருமாள் நாயக்கருக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கும், என் சித்தபா பெருமாள் நாயக்கருக்கும் பாகம் பிரிந்ததா என்று எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கும், என் சித்தப்பா பெருமாள் நாயக்கருக்கும் வாய்மொழியாக பாகம் பிரிந்து அவர்அவர் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா A அட்டவணை கண்டாட்சி மேட்டில் உள்ள சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் தகப்பனாருக்கு எவ்வளவு சொத்து பாத்தியமாக இருந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வாதி மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றாலும்,அனைவருக்கும் பாகம் உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக என் தந்தை ஆவணம் எதுவும் யாருக்கும் எழுதிவைக்கவில்லை. இறந்த என் சகோதிரிகள், தெய்வாணை, ரூக்குமணி ஆகியோரின் வாரிசுகளுக்கும் வாதி ஜெகதீஸ்வரிக்கும் வழக்கு சொத்துக்களில் பாகம் உண்டு என்றால் சரியல்ல. நான் வாதிக்கு உரிய பாகத்தை தடுப்பதற்காக தவறாக கட்சி ஆடுகிறேன் என்றால் சரியல்ல.